the Corporation and also the exact stage at which the matter stands. Also, will the Ministry insist on the Corporation to execute the scheme as early as possible?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசினர் சார்பில் மாநகராட்சிக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை. உறுப்பினர் அவர்கள் யோசனைப்படி மிக விரைவாகச் செய்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பாலம் கட்டி முடிக்க வேண்டுமென்றால் ஒரு வருஷம் ஆகும். அதுவரை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்குமென்பதால் உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அந்தக் குழந்தை இறந்தது லாரியில் அடிபட்டா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் அடிபட்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்விக்குப் பதில் அளித்ததிலேயே லாரியினால் ஏற்பட்ட விபத்து என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : மன்றோ பாலத்தில் நடந்த விபத்தில் இறந்துபோன சிறுமியின் பெற்றோர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கும் நஷ்ட ஈட்டை இந்த அரசாங்கம் தந்ததா? தரவில்லை என்றால் அதைத் தருவதற்கு இப்போதாவது யோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனிப்பட்ட அந்த லாரிச் சொந்தக்காரரிடம் கேட்டு அவர் கொடுத்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. இது அரசாங்கத்தைப் பொருத்த விஷயம் இல்லை.

Invalid food

*8 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the unauthorised sale of invalid food in the "Burma Market" in the First Line Beach in Madras City?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஜார்ஜ் டவுன் பகுதியைச் சேர்ந்த உணவுப் பங்கீட்டு அதிகாரியின் நேர்முக உதவியாளர் "பர்மா அங்காடித் தெருவில்" முன்னெச்சரிக்கையின்றிச் சோதனையிட்டபோது, குழந்தைகள்/ஏலாதோர் உணவுப் பொருள்கள் பல கைப்பற்றப்பட்டன. உரிய முறைப்படி ஒப்பம் பெற்றுக் கொண்ட பின்னர் அவை அதிகாரம் வாய்ந்த வணிகரிடம் ஒப்படைக்கப்பட்டன.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தக் குழந்தைகள் உணவுப் பண்டங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அறவே நீக்கிவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதேகூட குழந்தைகள் உணவுப் பொருள்கள் சம்பந்தமாக முழுக்

1968 பிப்ரவரி 12]

கட்டுப்பாடு இல்லை. இப்போது விநியோகத்தில் இருக்கிற சிலபல குறைபாடுகளை உத்தேசித்து சிவில் சப்ளைஸ் ஜாயிண்ட் கமிஷனர் அவர்கள் இந்தக் கட்டுப்பாட்டை அறவே நீக்கிவிடலாம் என்று பரிந்துரையை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : ஏலாதோர் உணவுப் பொருள் தேவையானவர்களுக்குக் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த உணவுப் பொருள் அங்காடியில் தாராளமாக விற்கப்படுவதாக இருந்தால் எந்த முறையிலே விற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது ? இதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதே கூட அமுல், ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருள்களுக்கு அரசாங்கக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. மொத்த உற்பத்தியில் 20 சதவிகிதத்தைச் சர்க்கார் எடுத்து விற்பனை நிலையங்கள் மூலமும், விமன்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகள் மூலமும் வழங்குகிறது. உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு டிபுடி கமிஷனர் பர்மிட் கொடுத்து வழங்கப்படுகிறது. தவறு நடக்க சாத்தியக் கூறு இல்லை. 80 சதவிகிதம் அதிகாரம் பெற்ற வணிகர்கள் மூலமாக உற்பத்தியாளர்களால்தான் விநியோகிக்கப்படுகிறது. அதிலே சில விதிமுறைகள் இருக்கின்றன. கணக்குக் காட்ட வேண்டும், ஸ்டாக் எவ்வளவு என்று தெளிவாகப் போட வேண்டுமென்றிருக்கிறது. அரசாங்கம் இந்த பார்ஷியல் கண்ட்ரோலைக்கூட எடுத்து விடலாம் என்பதுபற்றி யோசித்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, may I know, as a result of this kind of raid of the Burma market, how much quantity was detected and how did they manage to get it ? Through what channel they got it? Are they competent merchants to sell it without a licence ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 80 சத விகிதம் லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கணக்குக் காட்ட வேண்டும், எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்று போர்டு வைக்க வேண்டும். ஆனாலும் வியாபாரிகளின் குயுக்தி முறைகளினால் வேறு மார்க்கெட்டுகளுக்குப் போகக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட குழந்தைகள் உணவு 20 சத விகிதத்தில் கிராமப்புற மக்களுக்குக் கொடுப்பது எத்தனை சதவிகிதம் ?

(விடை இல்லை)

DR. H. V. HANDE: Sir, will this Government come forward to find out the number of tins of milk food available from the manufacturers for this State in a month or a year and also the

number of tins required by the consumers. If that information is found out, both this House and the Government will have an idea as to the exact difficulty in the distribution of milk food ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதிலே அந்த மாதிரி யான நிலைமைகள் ஏற்படவில்லை. அரசாங்கமே பொதுமக்க ளுக்குச் சவுகரியம் செய்து கொடுக்கலாம் என்ற எண்ணத்தில்தான் 20 சதவிகிதத்தை ஏற்றுக் கொண்டது. பொதுவாக, இவற்றின் உற்பத்தி குறைவாகவும், வாங்குகிறவர்களின் எண்ணிக்கை அதிக மாகவும் இருக்கின்ற காரணத்தால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. மொத்தம் எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதைப்பற்றி ஆராய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பர்மா அங்காடியில் வெளி நாட்டில் இருந்து கடத்திக் கொண்டு வந்த பொருள்கள் விற்கப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அந்தத் தமிழர்களுக்கு மாற்றுத் தொழில் ஏதேனும் கொடுக்க அரசாங்கம் வழி செய்யுமா ?

(பதில் இல்லை)

Juvenile smoking

*9 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state whether any survey has been undertaken in regard to increasing juvenile smoking in recent times ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சிறுவர்கள் பீடி பிடிக்கின்ற கெட்ட பழக்கத்தைப் போக்காவிட்டால் அவர்களுக்குப் புற்று நோய் வருகிறது என்ற காரணத்தால் அவர்கள் பீடி பிடிக்கக் கூடாது என்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புகை பிடிப்பதால் இளம் சிறார்களுக்கு வியாதி வருகிறது ; அந்தப் பழக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு முன்னாலே அமைச் சர்கள் எல்லாம் கலந்து கொண்ட மாநாட்டிலே முடிவு எடுக்கப் பட்டு அரசாங்கத்திற்கு அது பற்றித் தெரிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொருத்தவரை 1946-ம் ஆண்டிலிருந்தே இந்தக் கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதைச் சட்டத்தின் மூல மாகத் தடுத்து விட முடியாது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்து மாணவர்கள் இதைப் பயன்படுத்தக் கூடாது என்ற அளவிலே எல்லாப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அரசாங்கத்தால் உத்தரவு அனுப்பப்பட்டு கல்வி நிலையங்களிலே புகை பிடித்தலைக் கடுமையாகத் தடுக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS